பொறியாளர்கள் மற்றும் உறுப்பினர்-செயலர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

கட்டட வசதி

***7335—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேற்கு தொகுதி, முத்துநாயக்கன்பட்டி மற்றும் மாங்குப்பையில் கால்நடை மருத்துவ நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலங்களிலெல்லாம் பாழடைந்த, பழைய கட்டடங்களில்தான் கால்நடை நிலையங்கள் இயங்கி வந்தன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், மூன்றாவது முறை முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 2011-2012 ஆம் ஆண்டிலே கட்டப்பட வேண்டிய 877 கட்டடங்களில் 661 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 2012-2013 ஆம் ஆண்டிலே கட்டப்பட வேண்டிய கால்நடை நிலையங்களில், 649 கட்டங்களிலே 271 கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளிலே ஏறக்குறைய 932 கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. வெங்கடாஜலம் அவர்கள், முத்துநாயக்கன்பட்டியிலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கிறார்கள். முத்துநாயக்கன்பட்டியிலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் இயங்கி வருகிறது. இங்கே கட்டடம் கட்டுவதற்கு, கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் நிதியாண்டில் 11.6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தப் புதிய கட்டடம் கட்ட சர்வே எண் 264-ல் உள்ள சந்தைப் புறம்போக்கு இடத்தில் 30 சென்ட் இடம் ஒதுக்கப்பட்டு, நில மாற்ற முன்மொழிவிற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அதற்கு அனுமதி வந்தவுடன், கட்டடம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.*

திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டதைக் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா' என்ற பாடல் ஒன்றுண்டு. ஆனால், கேட்காமலேயே தமிழகத்தின் ஏழையெளிய மக்களுக்குப் பல திட்டங்களை வாரி வழங்கும் வள்ளல், வருங்கால பாரதம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டியிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாங்குப்பை ஊராட்சி ஒன்றியம் விவசாயிகள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கால்நடை வளர்ப்பையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியினரின் நீண்ட நாள் கோரிக்கையான கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மாங்குப்பை கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு 3,000 கால்நடைக் கிளை அலகுகள் இருக்க வேண்டும். 3 கிலோ மீட்டர் சுற்றளவில் வேறு எந்த கால்நடைக் கிளை நிலையமும் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. அதற்குட்பட்டு அந்தப் பகுதி இருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பகுதி ஆய்வு செய்யப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமநாயக்கன்பட்டி பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அதேபோல முத்துநாயக்கன்பட்டியிலே ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. அதற்கு இடையிலே 5 கிலோ மீட்டர் தொலைவிலே மாங்குப்பை பகுதி அமைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாங்குப்பை பகுதிக்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமாய் பணிவோடு கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறை மாவட்ட

இணை இயக்குநருக்கு இந்தப் பரிந்துரை அனுப்பப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

கைத்தறி தொழில்நுட்பப் பூங்கா

***5596**—**முனைவர் வைகைச்செல்வன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டையில் கைத்தறி தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்தி விடையை அளிக்கிறேன்.*

அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டையில் கைத்தறி தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் நெசவாளர்களின் நிலை உயர்ந்திடவும், உற்பத்தி அதிகரித்திடவும், அருப்புக்கோட்டை பகுதியில் தொழில் முனைவோர் முன்வந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.*

முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாயின் பாதங்களில்தான் சொர்க்கம் இருக்கிறது' என்று சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அண்ணல் முகமது*